# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE

REACHING NATIONS

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXIX YEAR OF OUR LORD JESUS CHRIST, 2024 OCTOBER No. 10


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### நீதிமொழிகள் 13:1~10

1. ஞானமுள்ள மகன் தகப்பனுடைய போதகத்தைக் கேட்கிறான்; பரியாசக்காரனோ கடிந்துகொள்ளுதலுக்கு செவி கொடான்.
2. மனுஷன் தன் வாயின் பலனால் நன்மையைப் புசிப்பான்; துரோகிகளின் ஆத்துமாவோ கொடுமையைப் புசிக்கும்.
3. தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்.
4. சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது; ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும்.
5. நீதிமான் பொய்ப்பேச்சை வெறுக்கிறான்; துன்மார்க்கனோ வெட்கமும் இலச்சையும் உண்டாக்குகிறான்.
6. நீதி உத்தம மார்க்கத்தானைத் தற்காக்கும்; துன்மார்க்கமோ பாவியைக் கவிழ்த்துப்போடும்.
7. ஒன்றுமில்லாதிருக்கத் தன்னைச் செல்வனாகப் பாராட்டுகிறவனும் உண்டு; மிகுந்த செல்வமிருக்கத் தன்னைத் தரித்திரனாகப் பாராட்டுகிறவனும் உண்டு.
8. மனுஷனுடைய ஐசுவரியம் அவன் பிராணனை மீட்கும்; தரித்திரனோ மிரட்டுதலைக் கேளாதிருக்கிறான்.
9. நீதிமான்களின் வெளிச்சம் சந்தோஷிப்பிக்கும்; துன்மார்க்கரின் தீபமோ அணைந்து போம்.
10. அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும்; ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ ஞானம் உண்டு.

## நமது எண்ணங்களின் முக்கியத்துவம்!



**Our Thoughts Matter : Reflections FROM DAVID!**

*Rev.* ஏஞ்சலின் செல்வகுமாரி, *Hon. Editor-in-Chief*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாசகர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். **அழைப்பின் எதிரொலி** குடும்பத்தாருடன் மாதந்தோறும் தொடர்பு கொள்வது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றவும், அவருடைய வருகைக்கு நாம் ஆயத்தமாகவும் அவர் நம்மை வழி நடத்துவாராக!

அமெரிக்க நாடு உருவாக காரணமாக இருந்தவர்களில் ஒருவரான புகழ் பெற்ற பெஞ்சமின் ஃப்ராங்கிளின் என்பவர், "நீங்கள் திட்டமிடத் தோல்வியடைந்தால், தோல்வியடையத் திட்டமிடுகிறீர்கள்." என்றார். திட்டமிடுதல் நமது வாழ்க்கையின் முக்கியமான ஒன்றாகும்.

திட்டமிட்டு செயல்படுவதில் சிலர் கெட்டிக்காரர்கள்; வேறு சிலரோ திட்டம் தீட்டுவதில் வல்லவர்கள்; ஆனால் அதைச் செயல்படுத்துவதில் சிரமப்படுவர். இன்னும் சிலரோ இதையொன்றும் செய்யாமல் காலத்தின் போக்கில் செல்வதையே தெரிந்து கொள்கின்றனர். நீங்கள் இதில் எந்த ரகத்தைச் சேர்ந்தவரோ ?

**மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம்; ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலை நிற்கும்.** நீதிமொழிகள் 19:21 என்று வேதம் நமக்கு நினைவூட்டுகிறது.

நமது கல்வி, திருமணம், பிள்ளைகள், வேலை, சொத்து சேர்த்தல் போன்ற எதிர்காலத்தைப் பற்றி பல காரியங்களை நாம் திட்டமிடலாம். ஆனால் கர்த்தரின் விருப்பமே

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!



## கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன்

நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

HON. EDITOR-IN-CHIEF
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.
HON. MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.
GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.
ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
EDITORIAL BOARD
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
EDITOR, PUBLISHER & PRINTER

Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858
95661 31858
E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in
WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com
YOUTUBE CHANNEL
Echo of His Call

### கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் - யாத்திராகமம் 14:14

பிரியமான நண்பர்களே!

ஈடு, இணையற்ற நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம்.

2024–ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் வந்துள்ள நாங்கள் தேவனருளிய சொல்லிமுடியாத ஈவுகளுக்காக உங்களுடன் இணைந்து அவருக்கு நன்றி செலுத்துகிறோம். எண்ணற்ற நெருக்கடியான வேளைகளில் உங்கள் உதவிகளை தேவன் நமது ஊழியங்களுக்குப் பயன்படுத்தியுள்ளார்; இந்த தேவன் உங்களுக்கும் உதவி செய்ய ஆயத்தமாயுள்ளார். ஆகையால் உங்களுடைய அற்புதங்களுக்கு நீங்கள் அவரை விசுவாசித்து, அவரையே சார்ந்திருங்கள்.

நம்முடைய தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதையை ஆயத்தம் செய்து வருகிறோம்; **அழைப்பின் எதிரொலி** ஊழியங்கள் மூலமாகவும், போதகரது ஊழியத்தின் மூலமாகவும் கடந்த ஆண்டுகளில் நீங்கள் பெற்ற ஆசீர்வாதங்களைச் சுருக்கமாக உங்கள் புகைப்படத்துடன் இணைத்து ஒரு பக்க அளவு எழுதி அனுப்பினால், அவற்றைப் பிரசுரிக்க வசதியாக இருக்கும். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

இம்மாத வெளியீட்டின் மூலம் கீழ்க்கண்ட காரியங்களுக்காக உங்கள் ஊக்கமான ஜெபத்தை வேண்டுகிறோம்.

- **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை மாதந்தோறும் 16 மொழிகளில் வெளியிடுவதில் சுமார் 75 பேர் ஈடுபட்டுள்ளனர்; அவர்கள் செய்திகளை ஆயத்தம் செய்தல், தட்டச்சு செய்தல், மொழிபெயர்த்து, பிழைத்திருத்தம் செய்தல், வடிவமைத்தல், அச்சிடுதல், பக்கம் சேர்த்தல், முகவரி ஒட்டுதல் மற்றும் அஞ்சல் அலுவலகத்தில் சேர்த்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டு குறித்த நேரத்தில் அனுப்புகின்றனர். இவ்வூழியம் வளர்ச்சியடைந்த நிலையில் இப்பணியில் ஈடுபட்டுள்ள சகோதர, சகோதரிகள் சிலர் சுகவீனத்தினாலும், குடும்ப கஷ்டங்களாலும் தாக்கப்பட்டுள்ளனர். இவர்களனைவரையும் உங்கள் ஜெபங்களில் நினைவுகூரும்படி கேட்டுக் கொள்கிறோம்.
- பணியாளர்களின் மனப்பான்மை, அரசாங்கக் கொள்கைகள், நமது பங்காளர்களின் பணஉதவியில் ஏற்பட்டுள்ள குறைவு ஆகியவற்றால் ஊழியத்தின் சவால்கள் அதிகரித்துள்ளன. நவீன கால கிறிஸ்தவர்கள் பலர் செழிப்பின் உபதேசங்களாலும், இதர தவறான உபதேசங்களாலும், உலகக் கவர்ச்சிகளாலும் ஈர்க்கப்பட்டு, உண்மையான ஊழியர்களை ஒதுக்கித் தள்ளும் நிலைக்குச் சென்று விட்டனர். இது போன்ற சூழ்நிலைகளால் நமது ஊழியம் பாதிக்கப்பட்டாலும், கர்த்தர் நம்மை விசாரிப்பதில் உண்மையுள்ளவராயிருக்கிறார்.
- நமது சபைகள், **நெகேமியா வேதாகமக் கல்லூரிகள், வேதாகமத் தபால் கல்வி** மற்றும் **இறையியல் அஞ்சல் வழிக் கல்வி, அழைப்பின் எதிரொலியின்** YouTube ஊழியம், **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**, அச்சகம் ஆகியன நன்கு செயல்பட்டு வருகின்றன; தொடர்ந்து இவையனைத்திற்கும் உங்களுடைய ஜெபம் மற்றும் பொருளாதார ஊக்கம் தேவைப்படுகிறது.
- சுய விருப்புடன் நமது களப்பணிகளிலும், சபைகளிலும், அச்சகத்திலும், அலுவலகத்திலும், பள்ளியிலும், வேதாகமக் கல்லூரிகளிலும் ஊழியம் செய்ய நமக்கு அர்ப்பணிப்புள்ள நபர்கள் தேவைப்படுகின்றனர்.

Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) BIBLECOR - Postal Courses (3 languages) YouTube Ministry Online Courses Theological Correspondence Courses (2 languages) Church Planting Nehemiah Bible Colleges Gospel Printing Press Great Commission Partners St. Paul's Matriculation School Crusades Community Development

- நமது **நெகேமியா வேதாகமப் பள்ளிகளில்** இந்தி வகுப்புகளுக்கு மாணவர்கள் கிடைப்பது மிகுந்த சவாலாக உள்ளது. பல்வேறு காரணங்களுக்காகத் தங்களது ஊழியர்களை வேதாகமக் கல்லூரிகளுக்கு அனுப்ப சில தலைவர்கள் தயக்கமடைகின்றனர். எனினும் இவர்களைப் பயிற்றுவித்து, தேவைகளைப் பூர்த்தி செய்து தேவனுடைய அழைப்பின்படி ஊழியம் செய்ய தயார்படுத்தி இவர்களை அவரவர் பகுதிகளுக்கு நாம் திருப்பி அனுப்புகிறோம். நாம் பயிற்றுவித்த மாணவர்கள் தங்களது களங்களில் இப்பொழுது நட்சத்திரங்களைப் போலப் பிரகாசித்து வருகின்றனர். இவர்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

செப்டம்பர் முதல் டிசம்பர் வரையுள்ள மாதங்களில் பல்வேறு நற்செய்திப் பணிகளைச் செய்ய நாம் திட்டமிட்டுள்ளோம். இவற்றில் ஈடுபடுவோரது பாதுகாப்புக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஊழியத்தில் உடன் ஊழியர்களான உங்களது ஒத்துழைப்பை மிகவும் பாராட்டுகிறோம். உங்களின் அனைத்து கடிதங்கள், மணி ஆர்டர்கள், தபால்கள், E-mailகளுக்கு உடனுக்குடன் பதில் அளிக்கிறோம். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் உங்கள் காணிக்கையைப் பெற்றுக் கொண்டதற்கான இரசீதுகளோ, உங்கள் கடிதத்திற்குரிய பதில்களோ, **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையோ வரவில்லையானால் தயவு செய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். எங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்: +91–98410 71858 / 98412 71858.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,**

**போதகர் அலக்ஸ் சாம்சன் சாம்**
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**
(+91) 98410 71858 / 98412 71858,
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

## உங்கள் கவனத்திற்கு!

*நமது **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** 5 நிமிட தேவ செய்திகளும், ஜெபங்களும் தினமும் காலை 2.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் Echo of His Call YouTube சானலில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்ப்பதன் மூலம் கர்த்தரின் கிருபையைப் பெறலாம்.*

*மேலும், (+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய என்னுடைய தனிப்பட்ட (Personal) இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

இறுதியில் நமக்கு வாய்க்கும். ஏனெனில், **மனுஷனுடைய இருதயம் அவனுடைய வழியை யோசிக்கும்; அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர்.** நீதிமொழிகள் 16:9.

'சிந்தித்தல்' என்பது தேவன் மனிதக் குலத்திற்களித்த அற்புதமான ஈவாகும். நமது சிந்தனைகள் மிகவும் முக்கியமானவை என்று உளவியளாலர்கள் கூறுகின்றனர்; அவை நமது உணர்ச்சிகளையும், செயல்பாடுகளையும் இயக்குகின்றன. எனவே நாம் அனுமதிக்கும் எண்ணங்கள் நமது சிந்தனைகளை வடிவமைக்கிறது; அவை நமது சொற்களையும், நடத்தைகளையும் கட்டுப்படுத்துகிறது. இதனால்தான் "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள்" என்று வேதம் நமக்குக் கூறுகிறது. எனவே எண்ணங்கள் நம் வாழ்க்கையின் மிகவும் இன்றியமையாத பகுதியாகும்.

நமது எண்ணங்கள் நம் வாழ்க்கையின் போக்கை மாற்றும் வலிமை கொண்டவை. ஆகையால்தான், ... **நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன்** ... எரேமியா 29:11 என்று வேதம் குறிப்பிடுகிறது. நம்மைக் குறித்த தேவனுடைய நினைவுகள் வெறுமையானவையல்ல; அவை நோக்கம் நிறைந்தவை, உலகத்தின் நிகழ்வுகளையெல்லாம் இயக்கும் சிருஷ்டிகராகிய தேவன் நம்மைக் குறித்து சிந்திப்பதை எண்ணிப் பாருங்கள்; எனது எதிர்காலத்தை மாத்திரமல்ல, எதிர் கால சந்ததியையே அவர் தமது நினைவில் கொண்டுள்ளாரே. என்னே ஆச்சரியம்!

நம்மைக் குறித்து நாம் நினைப்பதைக் காட்டிலும் அவரது நினைவுகள் முற்றிலும் வேறுபட்டவை. ஆகையால்தான், **என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்.** ஏசாயா 55:8.

## கிதியோன்!

மீதியானியருக்குப் பயந்து, கோதுமையை அவர்களிடமிருந்து, தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்துக் கொண்டிருந்தான் கிதியோன். இவ்வாறு தைரியமற்ற நிலைமைதான் கிதியோனின் உண்மை நிலவரமாயிருந்தது. ஆனால், கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி, **...பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்.** நியாயாதிபதிகள் 6:12. ஆம், கிதியோனைக் குறித்து தேவனது பார்வை வித்தியாசமானதாயிருந்தது. ஆனால் கிதியோனோ, **ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றார்.** நியாயாதிபதிகள் 6:15. இதுவே தன்னைக் குறித்து கிதியோனின் பார்வையாயிருந்தது. ஆனால் தேவனோ அவனைப் பராக்கிரமசாலியாகவும், இஸ்ரவேலை மீதியானியரிடமிருந்து இரட்சிப்பவனாகவும் கண்டார்.

நமது சொந்த எண்ணங்களே நமது முன்னேற்றத்திற்குக் காரணமாயுள்ளன. நமது அழைப்பையும், தாலந்துகளையும், வரங்களையும் குறைத்து மதிப்பிடுதலே தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதில் நம்மைத் தோல்விக்கு வழிநடத்தும்.

## தேவனுடைய வேளைக்கு முன்பாக செயல்படுதல்!

இன்னும் சிலர் தேவன் நியமித்த காலத்திற்கு காத்திராமல், தன்னிச்சையாக செயல்படுகின்றனர். உதாரணத்திற்கு, மோசேயை எடுத்து கொள்வோம். **அவன் மறுநாளிலும் வெளியே போனபோது, எபிரெய மனுஷர் இருவர் சண்டை பண்ணிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவன் அநியாயஞ் செய்கிறவனை நோக்கி: நீ உன் தோழனை அடிக்கிறது என்ன என்று கேட்டான். அதற்கு அவன்: எங்கள் மேல் உன்னை அதிகாரியாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார்? நீ எகிப்தியனைக் கொன்று போட்டதுபோல, என்னையும் கொன்றுபோட நினைக்கிறாயோ என்றான். அப்பொழுது மோசே காரியம் நிச்சயமாக வெளிப்பட்டது என்று பயந்தான்.** யாத்திராகமம் 2: 13, 14. தேவ நேரத்திற்கு முன்பாக செயல்பட்டதின் நிமித்தமாக, மோசே எகிப்தை விட்டு வெளியேற வேண்டியச் சூழ்நிலை வந்தது.

## எண்ணங்களின் வலிமை !

நமது எண்ணங்கள் மிகவும் வலிமையானவை; அவை நமது உணர்ச்சிகளையும், நடத்தையையும் ஆள்கின்றன. உளவியலாளர்கள் இதனை ஆமோதிக்கின்றனர். ஆகையால்தான் உளவியல் மருத்துவ சிகிச்சையில் இது முக்கியத்துவம் பெறுகிறது. எண்ணங்கள் நமது வாழ்க்கையின் மிக முக்கிய பங்கை ஆட்கொள்கிறது; ஆகையால்தான் இருதயத்தைக் காத்துக் கொள்ள வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது. நமது எண்ணத்தில் நாம் அனுமதிப்பதுதான் நமது சிந்தனையில் முக்கியத்துவம் பெறுகிறது. தவறாக நடத்தப்பட்ட ஒரு எண்ணம், தேவனுடைய நோக்கத்தை விட்டு நம்மை முற்றிலும் விலகச் செய்து விடும்.

## தாவீது தன் இருதயத்தில் யோசித்தான் !

வேதம் கூறுகிறது தாவீது தேவனின் இருதயத்திற்கு ஏற்றவர் என்றும், எந்தச் சூழ்நிலையிலும் தேவனை பிரியப் படுத்த வேண்டும் என்றும், தேவன்தான் தன் வாழ்க்கையின் அஸ்திபாரம் என்பதில் மிகவும் கருத்து உள்ளவராய் இருந்தார். எவ்வளவு தான் சவுல் தாவீதைக் கொல்ல வேண்டு மென்று பிரயாசப்பட்டாலும், தேவன் தாவீதை சவுலின் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை. மாறாக சவுலை தாவீதின் கையில் 2 முறை ஒப்புக்கொடுத்தார்!

ஆனால் தாவீதோ! தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட மனிதனை நான் தொடமாட்டேன் என்று வைராக்கியமாய் இருந்தார். சவுல் அபிஷேகம் பண்ணப் பட்டவர்போல் நடக்காவிட்டாலும், தாவீதோ அவருடைய அபிஷேகத்துக்கு மரியாதை கொடுக்கத் தவறவில்லை.

இப்படிப்பட்ட தாவீது, திடீர் என்று ஓர்நாள் தன் இருதயத்தில் இப்படியாக யோசித்தார். **பின்பு தாவீது: நான் எந்த நாளிலாகிலும் ஒருநாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன்; இனிச் சவுல் இஸ்ரவேலின் எல்லைகளில் எங்கேயாவது என்னைக் கண்டுபிடிக்கலாம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகும்படிக்கும், நான் அவன் கைக்கு நீங்கலாயிருக்கும்படிக்கும், நான் பெலிஸ்தரின் தேசத்திற்குப் போய், தப்பித்துக் கொள்வதைப்பார்க்கிலும் நலமான காரியம் வேறில்லை என்று தன் இருதயத்தில் யோசித்தான்.** 1 சாமுவேல் 27: 1. தேவனின் பாதுகாப்பை மறந்து பெலிஸ்தியரிடம் அடைக்கலம் புகுந்தான்.

பெலிஸ்தியரிடம் சென்ற பின்பு நிறைய வெற்றிகள், புகழ், பெயர், பணம் எல்லாம் சம்பாதித்தார். இரத்தப் பிரியனாக மாறினார். தாவீது எங்கு சென்றாலும், அந்த நாட்டைக் கொள்ளையடிக்கிறபோது, புருஷர்களையும், ஸ்தீரிகளையும் உயிரோடு வைக்காமல், ஆடு மாடுகளையும், கழுதை களையும், ஒட்டகங்களையும், வஸ்திரங்களை யும் எடுத்துக்கொண்டு ... திரும்ப வருவார் (1 சாமுவேல் 27: 9).

பல நேரங்களில் நமக்கு கிடைக்கும் செல்வம், வேலை, செல்வாக்கு, எல்லாம் தேவனிடமிருந்து மட்டும் வரும் என்று எண்ணுகிறோம். இல்லை சாத்தானும் அதை கொடுக்க முடியும். எந்த ஒரு காரியம் நம்மை தேவனிடம் இருந்து பிரிக்கிறதோ, சபைக்குச் செல்ல முடியாமல், வேதம் வாசிக்க நேரம் இல்லாமல், ஜெபிக்க நேரமில்லாமல் செய்யும்போது, அது நிச்சயமாக தேவனுடைய ஆசீர்வாதமாக இருக்க முடியாது.

மேலும் தாவீது பெலிஸ்திய நாட்டில் இருக்கும்போது செய்த யுத்தங்கள் இரக்கமின்றி செய்த கொலைகள், தாவீதின் மனதில் பின்வரும் நாட்களில் தயக்கமில்லாமல் கொலை செய்யத் தூண்டியிருக்கலாம்.

நாம் எவ்வளவுதான் தேவனோடு நெருக்கமாய் இருந்தாலும், சில வேளைகளில் நம்மையும் அறியாமல், சந்தேகம் நம்முடைய எண்ணத்துள் வந்து விடுகிறது. தாவீதைப் போல, தேவன் நம்மேல் வைத்திருக்கும் நினைவுகள், சிந்தனைகள், எண்ணங்கள் நாம் எதிர்பார்ப்பதைவிட மேலானது என்று மறந்து விடுகிறோம். **நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு.**

எபேசியர் 3: 20

தாவீதின் இவ்வித நடத்தை அவரை கொடூர கொலைகாரனாக மாற்றியது மட்டுமின்றி, தனது படைத்தளபதி உரியாவையும் கொல்ல சதித்திட்டம் தீட்ட வைத்துக் கொல்லச் செய்தது. பெலிஸ்தியரின் நாட்டிலிருந்தபோதே இந்த எண்ணம் தாவீதுக்குள் விதையாக ஊன்றப்பட்டபடியால், அவர் தனது செய்கைகளுக்கு வருத்தப்படவில்லை. இவ்வாறு அவர் தேவ சமூகத்தையும் அவருடைய சித்தத்தையும் விட்டுத் தூரப் போனார்.

இஸ்ரவேலருக்கும், சவுலுக்கும், எதிராகப் போரிடுமளவுக்கு அவர் சென்று விட்டார். **ஆனால் பெலிஸ்தியரின் பிரபுக்களோ தாவீதைத் தங்களுடன் யுத்தத்திற்குச் சேர்த்துக் கொள்ளவில்லை.** (1 சாமுவேல் 29:4). ஒரு சொற்பமான வழிவிலகல் ஆழமான பின்மாற்றத்திற்கு எடுத்துச் சென்று விடும். தாவீதின் வீழ்ச்சி வேகமடைந்தது. அவருடைய செயலின் முடிவு மோசமானதாயிருந்தது; **அவர் திரும்ப**

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....


## நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

வேளச்சேரி – முழுநேரம் – இந்தி
சேப்பாக்கம் – மாலை நேரம் – தமிழ்
(திங்கள், செவ்வாய், வியாழன்)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 55 வருட அனுபவ ஸ்தாபனம்.

**Diploma in Theology**

கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

ECHO OF HIS CALL MINISTRIES
SINCE 1969

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2024 அக்டோபர் 19 முதல் நவம்பர் 18 வரை**

**(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்திலுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)**

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

அக்டோபர் 19 ⇨ தடைகளை மீறி **அழைப்பின் எதிரொலி** ஊழியங்கள் கட்டப்பட்டு வருவதற்காக ...

அக்டோபர் 20 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** முதல்வர், பணியாளர்கள் மற்றும் மாணவர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

அக்டோபர் 21 ⇨ அர்ப்பணிப்புடன் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைக்கு ஆதரவளித்து வரும் இணை ஆசிரியர்கள் கொண்ட நமது ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

அக்டோபர் 22 ⇨ **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு** புதிய முதல்வரை நியமிக்க உதவி செய்த கிருபைக்காக ...

அக்டோபர் 23 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை நமது சுவிசேஷ அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு அனைத்து பணித்தளங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறதற்காக ...

அக்டோபர் 24 ⇨ **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் பணியாளர்களை மற்றும் அவர்கள் குடும்பத்தினரைக் காத்து வருகிற கிருபைக்காக...

அக்டோபர் 25 ⇨ **அழைப்பின் எதிரொலி** ஊடக ஊழியத்தின் 5 நிமிட யூடியூப் செய்தியின் மூலம் எழும்பி வரும் சாட்சிகளால் எங்களை ஆசீர்வதித்த கிருபைக்காக ...

அக்டோபர் 26 ⇨ நமது சுவிசேஷத்தின் அச்சகத்தின் தங்குதடையற்ற இயக்கத்திற்காகவும் அதற்கு காரணமாயிருக்கும் திறமையான ஊழியர்களுக்காகவும் ...

அக்டோபர் 27 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

அக்டோபர் 28 ⇨ நம்முடைய பன்முனை ஊழியங்களில் கர்த்தரின் வழிகாட்டுதலுக்காக ...

அக்டோபர் 29 ⇨ நமது **அஞ்சல்வழி இறையியல் கல்வி** மற்றும் **தபால்வழி வேதாகமக்கல்வி** முறைகளின் வளர்ச்சிகளுக்காக ...

அக்டோபர் 30 ⇨ நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி**, சுமூகமான முறையில் செயல்பட்டு வருகிற கிருபைக்காக ....

அக்டோபர் 31 ⇨ களப்பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தின் மேல் சீரீ சுகம் பொழிந்து வரும் கிருபைக்காக ...

நவம்பர் 01 ⇨ நமது தலைமைப் போதகர் முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக ...

நவம்பர் 02 ⇨ நமது தலைமைச் சபையில் நடைபெறும் ஆண்கள் ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

நவம்பர் 03 ⇨ கடந்த மாதத்தின் பொருளாதார மற்றும் ஆவிக்குரிய தேவைகளை சந்தித்த கிருபைக்காக ...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

நவம்பர் 04 ⇨ உலகளாவிய அளவில் போதகர்களுக்கும் களப் பணியாளர்களுக்கும் தேவ பாதுகாப்பு அளிக்க வேண்டி ...

நவம்பர் 05 ⇨ ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளிடையே நடைபெறும் போரின் பதட்டம் நீங்கி, அந்நாடுகளுக்குள் ஒற்றுமையும், சமாதானமும் திரும்ப வேண்டி ...

நவம்பர் 06 ⇨ எல்லா கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் ஆசீர்வாதங்களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பிற்காகவும் ...

நவம்பர் 07 ⇨ அனைத்து மக்களின் மனக்கண்களை கிறிஸ்துவுக்குள் ஒளிரச் செய்ய ...

நவம்பர் 08 ⇨ மறுபடியும் சுகவீனமாக உள்ள நமது சகோதரி ஜெஸி வீணா சாம் செல்வ ராஜ் அவர்கள் சுகமடைவதற்காக ...

நவம்பர் 09 ⇨ உலகத்திலுள்ள அனைத்து ஆவிக்குரிய தலைவர்களுக்காக ...

நவம்பர் 10 ⇨ நமது தலைமைப் போதகர் எழுதிவரும் சுயசரிதைக்கான வழிநடத்துதல்களையும் மற்றும் வழிவாசல்களையும் அபரிமிதமான அளவில் ஆசீர்வதிக்க வேண்டி ...

நவம்பர் 11 ⇨ ஊழியப் பணித்தளங்களில் ஊழியம் செய்யும் ஊழியர்களுக்காக வேண்டி ...

நவம்பர் 12 ⇨ கர்த்தர் நமது **அழைப்பின் எதிரொலி ஊழியத்திற்கு** அர்ப்பணிப்புள்ள பணியாளர்களை கொடுக்க வேண்டி ...

நவம்பர் 13 ⇨ நம் ஊழியர்களுக்கான ஊதியங்கள், காகிதம், தபால், போக்குவரத்து ஆகியவற்றிற்கான பொருளாதாரத் தேவைகளை தேவன் சந்திக்க வேண்டி ...

நவம்பர் 14 ⇨ போதை பழக்கமுள்ளோர் மற்றும் தீயசெயல்களில் ஈடுபடுவோர் அவற்றினின்று விலகி நல்வாழ்வு வாழவேண்டி ...

நவம்பர் 15 ⇨ இந்த தலைமுறையைச் சேர்ந்த இளம் பருவத்தினர் மற்றும் சிறுவர்களுக்காக ஜெபிக்கின்ற **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசன ஊழியத்தில்** ஏராளமான மக்கள் பங்கேற்க வேண்டி ...

நவம்பர் 16 ⇨ உலக நாடுகள் அனைத்திலும் ஒற்றுமையும் சமாதானமும் நிலைத்திருக்க வேண்டி ...

நவம்பர் 17 ⇨ சுவிசேஷம் சென்றடையாத இந்திய நாட்டின் பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றிட நமக்கு வாய்ப்பளிக்க வேண்டி ...

நவம்பர் 18 ⇨ நமது நாட்டின் தலைவர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் அதிகாரத்தில் இருப்பவர்கள் சிறப்பாக பணி புரிந்திட வேண்டி ...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

**வந்து பார்த்தபோது சம்பாதித்த எல்லாவற்றையும் இழந்து போயிருந்தார்** (1 சாமுவேல் 30:1–2)

தாவீதின் மனைவிகள் உட்பட எல்லாவற்றையும் அமெலேக்கியர் எடுத்துக் கொண்டு போய்விட்டனர். **தாவீது மிகவும் நெருக்கப்பட்டார் சகல ஜனங்களும்... அவனைக் கல்லெறிய வேண்டும் என்று பேசிக் கொண்டார்கள்** (1 சாமுவேல் 30:6).

தாவீது முற்றிலும் தனிமைப் படுத்தப்பட்டான்; ஒவ்வொருவரும் அவனுக்கு எதிராகத் திரும்பினர். ஒரு ராத்திரியில் தாவீது தன் குடும்பத்தையும், ஆஸ்தியையும், புகழையும் இழந்தார். அவருடைய சொந்த ஜனங்களே அவனைத் தாக்கவும், கொல்லவும் முற்பட்டனர். தனது பிரச்சனைகளையும் பகிர்ந்து கொள்ள தாவீதுக்கு ஒருவருமில்லாமற்போனது.

ஒரு தலைவனாயிருப்பதென்றால் அடிக்கடி அது தனிமையான அனுபவம்தான். சாதகச் சூழ்நிலைகளில் தலைவர்களுக்குப் பெயரும், புகழும் வந்து குவியும்; ஆனால் பாதகமான சூழ்நிலைகளில், தங்களது உள்ளக் குமுறலைப் பகிர்ந்து கொள்ள ஒருவருமில்லாது போவர். மற்றவர்களைப் போலவே, தாவீதும் எல்லாவற்றையும் இழந்து தனது உணர்வுகளை யாரிடமும் வெளிக்கொணர யாருமின்றி நெருக்கப் பட்டார். அவரது மனதின் வலி புரிகிறதா உங்களுக்கு?

கர்த்தரை விட்டு விலகியிருப்பது நல்லதென சில வேளை நாம் நினைக்கலாம். ஆனால் அளவற்ற அவரது அன்பினிமித்தம் அவர் சரியான பாதையை அனுமதிக்கிறார்; அது நமது பாவங்களையும், கீழ்ப்படியாமை யையும் கடந்து செல்ல உதவுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்கு நித்திய ஜீவனளிக்க பரலோகம் விட்டிறங்கி மனித ரூபமானார். **அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்...** பிலிப்பியர் 2:6–8.

நமக்கு ஜீவனையும், வாழ்வுக்கு அர்த்தத்தையும், நோக்கத்தையும் அளிக்க, அவர் சிலுவையில் மாள்வர். நமக்குப் பிரதிபலனளிக்க அவர் திரும்ப வருகிறார்; நாம் அவரை நேசித்து அவரோடு நெருங்கி நடப்பதையே அவர் வாஞ்சிக்கிறார்.

## தாவீது கர்த்தருக்குள் பெலன் கொண்டார்!

தாவீது மிகவும் நெருக்கப்பட்டார்; அதேவேளையில் தாவீது கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டார். தான் தேவனை விட்டு விலகிப் போனதை உணர்ந்து, புதுப்பிக்கப்படும்படி அவரிடம் திரும்ப வந்தார்; தனது நம்பிக்கையற்ற சூழ்நிலையில் தேவன் மாத்திரமே தனது பெலனென்று கண்டறிந்தார் தாவீது. தான் அடுத்து செய்ய வேண்டியதை அறிந்து கொள்ள கர்த்தருடைய முகத்தைத் தேடினார். அவரை வெகுவாய் சார்ந்தி ருப்பதை வெளிப்படுத்தினார். இப்பொழுது தேவ பெலத்தில் முன் செல்ல விரும்பினார்.

மன்னிப்படையவும், ஊக்கமடைய வும், பெலனடையவும், திரும்பக் கட்டப்படவும் தேவன் நம்மைத் தம்மிடம் அழைக்கிறார். தாவீதைப் போல நாமும் தேவனுடைய கரங்களில் வீழ்வோமாக!

**தாவீது தேவனிடத்தில் திரும்பிய போது தாவீது இழந்த எல்லாவற்றையும் திருப்பிக் கொண்டார்** (1 சாமுவேல் 30:18,19). தனக்காக மாத்திரமல்ல. தன்னுடனிருந்த மனிதர் அனைவருக்காகவும் தாவீது தான் இழந்த எல்லாவற்றையும் திருப்பிக் கொண்டார். நாம் தேவனிடத்தில் திரும்பும்போது, பாதையே இல்லாத இடத்தில் அவர் ஒரு வழியைத் திறப்பார். இயற்கைக்கு அப்பாற்பட்ட வாசல்களை அவர் திறப்பார்.

தாவீதைப் போல அனைத்தையும் இழந்து, திருப்பிக் கொள்ள சாத்தியமான வழியை எதிர்பார்த்து நீங்கள் காணப்படலாம். தாவீதைப் போல நீங்களும் தனிமையாய்க் காணப்படுகிறீர்களா?

பிரியமான சகோதர, சகோதரி களே! நாம் தனிமையில் இல்லை என்பதை நினைவு கூருங்கள்; பரம தகப்பனிடம் சொல்லுங்கள். அவர் எல்லாவற்றையும் நன்மையாக மாறப் பண்ணுவார்.

நண்பர்களே! தாவீதின் வாழ்க்கை யில் ஏற்பட்ட ஆழமான வீழ்ச்சி அவரது எண்ணங்களிலிருந்து தோன்றியது. ஆகையால் நமது எண்ணங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருப்போமாக! அதே வேளையில் இரக்கம் நிறைந்த நமது தேவனானவர் நாம் அவரிடம் திரும்பி வரவேண்டுமென்று, திறந்த கரங்களோடு காத்திருக்கிறார்.

அவரிடம் ஓடி வருவீர்களா?

*******

# இயற்கைக்கு அப்பாற்பட்ட பாதுகாப்பின் வழிகள்!

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் தலைமை சபையில் அளித்த செய்தி)

நீங்கள் எவ்வளவு பெரிய ஆபத்தி லிருக்கும்போதும் ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டால், அவர் அந்த ஆபத்துக்களி லிருந்து உங்களை விடுவித்து உங்களைப் பாதுகாப்பார். அவர் உங்களைப் பாதுகாக்கும் பொழுது நீங்கள் அவருக்குத் துதி செலுத்த வேண்டும். நீங்கள் அவரைக் கனப்படுத்தா மல், அவருக்கு துதி செலுத்தாமல், அவரை மேன்மைப்படுத்தாமல் இருந்தால், உங்களுக்கு உதவி அவசியப்படும் போது தேவன் உதவி செய்வார் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது.

எப்படிப்பட்ட சூழ்நிலைகளா யிருந்தாலும், அவருக்கு முன்பாக எப்பொழுதும் நாம் தாழ்மையுடனிருக்க வேண்டும். ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படி மட்டும் தேவனிடம் ஜெபிக்கும் சிலர் இருக்கின்றார்கள். தங்கள் ஜெபத்திற்குப் பதில் கிடைத்ததும் அவர்கள், தேவன் அவர்களுக்கு செய்த நன்மைகளை மறந்து, தாங்கள் நன்மைகளைப் பெற்றுக் கொண்டதற்குத் தங்கள் சொந்த முயற்சியே காரணம் என்று தங்கள் மார்பை தட்டிக் கொள்ளுவார்கள். அவர்கள் தேவனைக் கனப்படுத்தவில்லை, அவரை மகிமைப்படுத்து வதுமில்லை. தங்களையே மேன்மையானவர் களாகக் கருதுகின்றார்கள். அப்படியிருக்கக் கூடாது.

தன்னுடைய இருதயத்தின் ஆழத்தி லிருந்து, "எனக்கு எல்லாம் அவரே" என்றுதான் சொல்ல வேண்டும்; மனிதன் முகத்தைப் பார்க்கிறான். தேவனோ இருதயத்தைப் பார்க்கிறார்.

நீங்கள் முற்றிலுமாக அவரிடம் உங்களை ஒப்புக்கொடுக்கும் பொழுது, அவர் உங்கள் மீது அதிக அக்கறையுடையவ ராயிருப்பார். அப்பொழுது உங்கள் வழிகளிலெல்லாம் உங்களைக் காக்கும்படி அவர் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளை யிடுவார். அவர் உங்களோடிருந்து உங்களை கனப்படுத்துவார். உங்களை பாதுகாப்பார்.

**உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர் களுக்குக் கட்டளையிடுவார். அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவ னைக் கனப்படுத்துவேன்.** சங்கீதம் 91:11, 15.

## 1. தூதன் மூலம் உதவுவார்!

**சிங்கங்கள் என்னைச் சேதப்படுத் தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப் போட்டார்; அதேனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாய்க் காணப்பட்டேன்; ராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிக்கேடு செய்ததில்லை ...** தானியேல் 6:22.

தானியேல் ஒரு தேவனுடைய மனிதன். தினமும் 3 முறை தேவனை சேவித்து வந்தான். தானியேலிடம் பொறாமை கொண்ட பிரதானிகளும், தேசாதிபதிகளும் இராஜாவை அணுகி, எந்த மனிதனும் இராஜாவைத் தவிர வேறு யாரையும் சேவிக்கக்கூடாதிருந்தும், அப்படி யாராவது சேவித்தால் அவர்களை சிங்கங்களின் கெபியில் போட வேண்டுமென்று உத்தரவு பெற்றார்கள். தானியேல் வழக்கம்போல் தினமும் 3 முறை கர்த்தரையே சேவித்தான். இதனைக் கண்ட பிரதானிகளும், தேசாதிபதி களும் இராஜாவிடம் தெரிவித்து தானியேலை சிங்கங்களின் கெபியில் போட உத்தரவு பெற்றார்கள். தானியேல் இராஜாவிடம் முறையிடாமல் தேவனிடம் முறையிட்டான்.

அப்பொழுது இராஜாவின் வேலை யாட்கள் வந்து அவன் கைகளையும் கால்களையும் கட்டி சிங்கங்களின் கெபியி னுள் போட்டார்கள். இராஜா தானியேலை காப்பாற்ற முற்பட்டான். ஆனாலும் இராஜா தான் இட்ட கட்டளையை தம்மால் மீற முடியாததால் இந்தக் காரியம் நடந்தது.

அடுத்த நாள் ராஜா சிங்கங்களின் கெபியின் அருகே வந்தான். ராஜா கெபியின் பக்கத்தில் வந்து துக்கம் நிறைந்த குரலில் தானியேலைக் கூப்பிட்டு, ... **“தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடை விடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத் தப்புவிக்க வல்லவரா யிருந்தாரா?” என்று ... கேட்டான்.** தானியேல் 6:20. **அப்பொழுது தானியேல்: “ராஜாவே, நீர் என்றும் வாழ்க.” சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்** என்றான். தானியேல் 6:21, 22

நாம் உலகத்தைப் பிரியப்படுத்த விரும்பாமல், கர்த்தரை உறுதியாய் பற்றிக்கொண்டி ருந்தால், அவர் நம்மைப் பாதுகாக்க தம்முடைய தூதர்களை அனுப்புவார். நம்மைப் பாதுகாப்பதற்கு அவர் முற்றிலும் உண்மை யுள்ளவர்.

என்னுடைய வாழ்வில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தை, உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். 1994 ஆம் ஆண்டுவரை, நான் ஒரு அரசாங்க அலுவலகத்தில் பணிசெய்து கொண்டிருந்தேன். ஊழியத்தின் நிமித்தம் அந்த வேலையை விட்டுவிடுவதா, வேண்டாமா என்று நான் ஒரு முடிவெடுக்க வேண்டியிருந்தது. அங்கே வேலை செய்வது எப்பொழுதும் சந்தோஷமளிப்பதாயிருந்தது.

1994ம் ஆண்டு ஊழியத்தின் நிமித்தம் ஒரு நாள், நான் கேரளாவிலுள்ள மூணாறு என்ற இடத்திற்கு போகும்படி பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டி ருந்தேன். தேவனைத் துதித்தும், மெல்லிய குரலில் பாடிக்கொண்டும் நான் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். என்னைச் சுற்றிலும் இயற்கைக்காட்சிகள் அழகா யிருந்தன. மெல்லிய குளிர்ந்தகாற்று வீசியது. மூணாறை அடைந்ததும் எனக்குள் ஒரு அசாதாரணமான உணர்ச்சி ஏற்பட்டது. ஒரு பெருங்காற்று என்னைத் தள்ளுவதுபோல் உணர்ந்தேன். அந்த நாள் முழுவதும் எனக்குள் ஒரு மிகப்பெரிய போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

கர்த்தர் என்னிடம், **“நீ திரும்பவும் உன் அரசாங்க வேலைக்குப் போகக்கூடாது”** என்று சொல்லிக் கொண்டிருந்தார். திரும்பத்திரும்ப அந்த செய்தி என்னுடைய மனதில் பளிச்சிட்டது. அந்த இரவு முழுவதும் எனக்குள் இந்தப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. வெளிப்புறம் கடுங்குளிர் என்பதாலும், என்னுடைய மனப்போராட்டத்தி னாலும் நான் என் படுக்கையில் நடுங்கிக் கொண்டிருந்தேன்.

திடீரென பரிசுத்த ஆவியானவர் என்னைப் படுக்கையில் எழுந்து உட்காரும்படி கட்டளையிட்டார். நான் எழுந்து உட்கார்ந்தேன். எனக்கு முன்பாக இரண்டு தேவதூதர்கள் உட்கார்ந்திருப்பதை நான் கண்டேன். அவர்களோடு பேசவும், அவர்கள் பேசுவதைப் புரிந்து கொள்ளவும் தேவன் எனக்குத் திறனளித்திருந்தார். அவர்கள், “இப்பொழுது மட்டுமே நீர் எங்களைப் பார்க்கிறீர். அநேக ஆண்டுகளாக நாங்கள்

### அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

**இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்**

### I. வேதாகமத் தபால் கல்வி

**தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.**

**“புதுவாழ்வு – உமக்கு” என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.**

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி

**ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம் ரூ.1000/– மட்டுமே.**

**மேலும் விவரங்களுக்கு :**

**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக “அழைப்பின் எதிரொலி” அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) “Echo of His Call Educational Trust” என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

## அதிசயம் ஆனால் உண்மை!

ஒருமுறை நானும் என் மகன் அலெக்ஸ் சாம்சன் அவர்களும் முன் அறிவிப்பும், அழைப்பும் பெற்று ஒரு குறிப்பிட்ட அயல் நாட்டிலுள்ள ஒரு ஊழியத்தில் தேவ செய்தியளிக்கும்படி சென்றிருந்தோம். எங்களை அழைத்த சகோதரர் எங்கள் இருவருடைய பயணச் செலவுகளையும் ஏற்றுக்கொள்வதாக உறுதியளித்திருந்தார்.

ஊழியம் மிகவும் சிறப்புடன் நடந்தது. ஆண்டவர் கிரியை செய்தார். பல ஆத்துமாக்களை ஆச்சரியமாக சந்தித்து, தமக்கென்று தெரிந்து கொண்டார். ஊழிய நாட்கள் முடிந்தவுடன் புறப்படும்போது, எங்களிடம் வாக்குப் பண்ணிய பயணச் செலவைத் தர அவரால் முடியாமற் போயிற்று. அது எங்களுடைய தொடர்ந்த பிரயாணத்தை மிகவும் பாதிக்கக்கூடிய பொருளாதார நெருக்கடியை எங்களுக்கு ஏற்படுத்தி விட்டது.

ஆனால், ஆச்சரியமான விதத்தில் எங்கள் மனதை இந்த நிகழ்ச்சி சிறிதளவு கூட பாதிக்கவில்லை. **அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்திருக்கிறோம்.** ரோமர் 8:28 – என்ற தேவ வார்த்தை எங்களுக்கு ஆறுதலையும், சந்தோஷத்தையும் அளித்தது. ஆனால் அடுத்தப் பட்டணத்திற்குச் செல்ல எங்களிடம் விமானப் பயணச்சீட்டு இருந்ததே தவிர எங்களுக்கு சாப்பாட்டுக்குப் பணம் இல்லாமற் போயிற்று. நாங்கள் தொடர்ந்து பிரயாணம் பண்ணிய விமானப் பயணச்சீட்டு மிகக்குறைந்த விலையில் வாங்கப்பட்டது. எனவே அந்த குறிப்பிட்ட விமானத்தில் காசு கொடாமல் சாப்பிடுவதற்குத் தண்ணீர் கூட தர மாட்டார்கள். எங்களிடம் காசு இல்லாததால், சற்று பசியுடனும், தாகத்துடனும் பிரயாணம் பண்ணி, சரியான நேரத்தில் விமானம் தரையிறங்கியது.

. . . மனுஷன் முகத்தைப் பார்ப்பான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் . . . I சாமுவேல் 16:7.

இந்தச் சூழ்நிலையில் எனக்கும், என் மகனுக்கும் யார் மீதும் வருத்தமோ, கசப்போ வரவில்லை. “ நம்மை அழைத்த சகோதரன் வாக்குப் பண்ணிய பணத்தைத் தராமல் விட்டு விட்டாரே” என்று நாங்கள் நினைக்கவும் இல்லை; ஒரு வார்த்தைக்கூட எங்களுக்குள் பேசவும் இல்லை; மனவேதனைப்படவுமில்லை. கர்த்தருக்கே மகிமை!

நாங்கள் சென்றடைந்த அடுத்தப் பட்டணத்தில் உள்ள தேவ பிள்ளைகள் எங்களை அன்புடன் வரவேற்று, தங்கள் இடத்திற்கு அழைத்துச் சென்று நன்கு உபசரித்தனர்.

அடுத்த நாள் திடீரென ஒரு சகோதரன் எங்களை சந்திக்க வந்தார். எங்களுடன் பல காரியங்களை உரையாடிவிட்டு, ஒரு காகித உறையினைக் கொடுத்து விட்டு, “ஐயா, இதை தங்களுடைய அவசரத் தேவைகளுக்குத் தரும்படி ஆண்டவர் என் உள்ளத்தில் பேசினார்” என்று கூறினார். அந்த உறைக்குள் எங்கள் பிரயாணச் செலவை விட அதிகமான பணம் இருந்தது. அதைப் பார்த்ததும் மிக மகிழ்ச்சியடைந்தோம். மட்டுமின்றி, அவரும் அவருடைய சபையாரும் எங்களுக்கு ஓர் நெருங்கிய நண்பர்களாகவும் மாறி விட்டனர். என்ன ஆச்சரியம்! எங்களுக்கு ஒரு குறைவும் இல்லை. இதுவரை எங்களை இப்படியே ஆண்டவர் நடத்தி வருகிறார்.

இதை வாசிக்கும் அன்பரே, இந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய நீங்களும் வருவீர்களா ?

**சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது.** சங்கீதம் 34:10. கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

*******

உமக்குப் பணிபுரிகிறோம். ஆனாலும் நீர் எங்களை ஒருபோதும் பார்த்ததில்லை. இப்பொழுது ஒரு காரியத்தை வெளிப் படுத்தவே நாங்கள் இங்கே வந்திருக்கிறோம்” என்று சொன்னார்கள். அவர்கள் என்னிடம் மிகவும் தெளிவாகப் பேசினார்கள்.

அவர்கள் பார்க்க மிகவும் அழகாயிருந்தார்கள். நான் அவர்களுடைய இறகுகளைக் கண்டேன். அவர்கள் இருவரும் ஒரே நேரத்தில் பேசினார்கள். அவர்கள் பேசியது நமக்குத் தெரிந்த எந்த மொழியுமல்ல. ஆனால் எந்த சிரமுமில்லாமல் அவர்கள் பேசியதைப் புரிந்து கொள்ளவும், அவர்களோடு பேசவும் எனக்கு முடிந்தது. அவர்களுடைய அறிவுரைப்படிதான் என் அரசாங்க வேலையை நான் விட்டுவிட்டேன். வெற்றியும் அடைந்துள்ளேன்.

நாம் **கர்த்தரை** உறுதியாய்ப் பற்றிக் கொண்டால், நம்மைப் பாதுகாக்க அவர் தம்முடைய தூதர்களை அனுப்புவார். நீங்கள் எங்கே போனாலும், உங்களுக்கு ஊழியம் செய்யும்படி தூதர்களுக்குக் கட்டளைக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல வருடங்களுக்கு முன்பாக என்னுடைய போதகர், காலஞ்சென்ற **போதகர் ஜி. சுந்தரம்** அவர்கள், அப்போஸ்தல கிறிஸ்தவ சபையில் செய்தியளித்துக் கொண்டிருந்தபோது திடீர் என்று, “எல்லோரும் தேவனுடைய மகிமையைப் பாருங்கள்”! என்று சொல்லி எங்களை வியப்புக்குள்ளாக்கினார். நான் என் கண்களைத் திறந்து பார்த்தபொழுது, பெரிய சிறகுகளுடன் கூடிய இரண்டு தேவ தூதர்கள் அந்த போதகரின் பின்னால் நிற்பதைப் பார்த்தேன். அப்படிப்பட்ட அற்புதமான தேவ தூதர்களை நாம் பார்க்க வேண்டுமானால் ஆவிக்குரிய கண்கள் நமக்கிருக்க வேண்டும். அப்படிப்பட்ட பரிசுத்தமான போதகருக்கு வேலை செய்யும் சிலாக்கியத்தை தேவன் எனக்குக் கொடுத்திருந்தார். நாம் ஆபத்திலிருக்கும் பொழுது அவர் நம்மைப் பாதுகாக்கும்படி தம்முடைய தூதர்களை அனுப்புவார்.

### 2. தேவன் தாமே வந்து உதவுவார்!

**அதற்கு அவன்: இதோ, நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்; அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை; நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான்.** தானியேல் 3:25.

**உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டு போவார்கள்** சங்கீதம் 91:12.

இங்கு கர்த்தர் இடைப்படும் விதங்களை பார்க்கிறோம்.

ஒவ்வொரு நேரத்திலும் நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்க தேவன் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடு கிறார். ஆனாலும் இது எல்லா நேரங்களிலும் ஒரே விதமாக நடப்பதில்லை. சில நேரங்களில், ஒரு விசுவாசி தேவனை நோக்கிக் கூப்பிட்டால், தேவன் தாமே கீழே இறங்கிவந்து அவனை விடுவிக்கிறார். அவர் அவனைக் கனம் பண்ணுவார்.

தானியேல் புத்தகத்தின் மூன்றாம் அதிகாரத்தை நாம் வாசிக்கும்பொழுது, சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற மூன்று வாலிபர்களும் நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையை வணங்கவில்லை. அவர்கள் பொற்சிலையை வணங்க மறுத்தால், சூடாக்கப்பட்ட அக்கினிச் சூளையில் போடப்படுவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் ராஜாவிடம், **நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை...** தானியேல் 3:17,18 என்று தெரிவித்தார்கள்.

அவர்கள் ஏழு மடங்கு சூடாக்கப் பட்ட சூளையினுள் தூக்கி எறியப்பட்டார்கள். அவர்களுக்கு தேவன்மேல் அசைக்க முடியாத விசுவாசமிருந்தது. அவர்களுக்கு என்ன நேரிடப்போகிறது என்று ராஜா எண்ணிக் கொண்டிருந்தான். நான்கு பேர் சூளையினுள் உலாவுவதைப் பார்த்த அவன் வியப்படைந் தான். அவன் தன் ஆலோசகர்களிடம், ... **நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்... நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான்....** தானியேல் 3:25

தேவன்மேல் மாறாத விசுவாசம் உள்ள ஒருவனிடம் அவனுடைய ஆபத்தில், அவர் தாமே நேரடியாக வந்து அவனை விடுவிப்பார். உங்களுடைய வரம்புக்கு அப்பாற்பட்ட ஒரு சூழ்நிலையில், **கர்த்தர்மேல்** அசைக்க முடியாத விசுவாசம் வைத்திருந்தால் தேவன் தாமே வந்து உங்களைப் பாதுகாப்பார். நல்லதும் கெட்டதுமான எல்லா சூழ்நிலைகளிலும் அவரை விசுவாசியுங்கள்.

### 3. சூழ்நிலையைத் தலைகீழாக மாற்றுவார்!

**சிறைச்சாலை மிகுந்த பத்திரமாய்ப் பூட்டப்பட்டிருக்கவும், காவற்காரர் வெளியே கதவுகளுக்குமுன் நிற்கவும் கண்டோம்; திறந்த பொழுதோ உள்ளே ஒருவரையும் காணோம் என்று அறிவித்தார்கள்.** அப்போஸ்தலர் 5:23.

இந்த அறிக்கை காவற்காரர்களால் கொடுக்கப்பட்டது. இந்த அசாதாரண சம்பவம், அப்போஸ்தலர்கள் பற்றியதாய் இருந்தது.

தேவனுடைய ஊழியர்களான அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர். திரளான ஆண்களும் பெண்களும் விசுவாசிகளாகி அதிக மதிகமாகச் சபையினுள் சேர்க்கப்பட்டனர். ஜனங்கள் நோயாளிகளைக் கொண்டுவந்து கட்டிலின்மேல் கிடத்தி, பேதுரு நடந்து போகையில் அவருடைய நிழலாகிலும் சிலர்மேல் படும்படிக்கு நோயாளிகளை வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள். அசுத்த ஆவி பிடித்திருந்தவர்களையும், வியாதியில் இருந்தவர்களையும் கொண்டு வந்தார்கள். அவர்கள் எல்லாரும் சுக மடைந்தனர். பொறாமையடைந்த பிரதான ஆசாரியனும், சதுசேயர்களும், அப்போஸ்த லரை சிறையில் அடைத்தனர்.

இந்த வசனங்களில் (அப்போஸ்தலர் 5:17,18) அப்போஸ்தலர் பிரசங்கித்தபோது ஜனங்கள் விசுவாசமடைந்து இரட்சிக்கப் பட்டார்கள். அப்போஸ்தலர் சிறையிலடைக்கப் பட்டனர். உறுதியான சிறைக்கதவுகள் மூடப்பட்டு காவற்காரர் கதவுகளை பூட்டுகளால் பூட்டினார்கள். கர்த்தருடைய தூதன் ஒருவன் இரவில் சிறையினுள் போய், சிறைக்கதவுகளைத் திறந்து அப்போஸ்தலர் களை விடுவித்தான். தேவதூதன் அப்போஸ்தலர்களை வெளியே கொண்டு வந்து, அவர்களிடம், **நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான்.** அப்போஸ்தலர் 5:20

அவர்கள் விடுவிக்கப்பட்ட உடனேயே கதவுகள் பூட்டிக்கொண்டன. பூட்டுகள் முன் இருந்தபடியே இருந்தன. என்ன நடந்தது என்று காவற்காரர் ஒருவருக்கும் தெரியாது. யாரும் பார்த்திராதபடி தேவன் அவர்களைக் காப்பாற்றினார். தேவன் உங்களுடைய சூழ்நிலையையும் தலைகீழாய் மாற்ற முடியும்!

அன்பான நண்பனே, உன்னுடைய வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றம் தேவைப்படுகிறதா? உங்களின் இப்போதைய சரீரப்பிரகாரமான அல்லது மனரீதியிலான அல்லது நிதி அல்லது ஆரோக்கியம் அல்லது வேறு எந்த ரீதியிலுமான காயங்களையும் ஒருவர் தலைகீழாக மாற்ற வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா? உங்கள் வாழ்வில் 100% முற்றிலுமான மாற்றம் உண்மையிலேயே அவசியப்படுகிறதா? நிச்சயமாக உங்களுக்கு அவர் உதவி செய்து உங்களை விடுவிக்க வல்லவர்!

அன்பானவர்களே! நீங்கள் தேவனோடிருந்தால், அவர் உங்களோ டிருப்பார். அவரை நீங்கள் விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டால், எந்தவிதமான ஆபத்து உங்களுக்கு ஏற்பட்டாலும், அதை நிவிர்த்தி செய்யக்கூடிய எல்லா வழிகளிலும் உங்களுக்கு உதவி செய்ய நம்முடைய பரமபிதா உங்களோடு இருக்கிறார். எனவே மனம் கலங்காதிருங்கள். நம்முடைய நெருக்கத்தில் அவர் நமக்கு ஆறுதலளிப்பார்!

*******

## அன்பான வாசகர்களின் கவனத்திற்கு . . .

### போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதை

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதையை புத்தக வடிவில் முடிப்பதற்கான நிறைவுக் கட்டத்தில் இருக்கிறோம். நமது போதகரின் ஊழியத்தின் மூலம் நீங்கள் பெற்ற நன்மைகளை 10 வரிகளில் சாட்சியாக எழுதி அனுப்பவும். கூடுதலாக தங்கள் புகைப்படத்தை அனுப்பினால் அதனை சுயசரிதை புத்தகத்தில் சேர்த்து வெளியிட உதவியாக இருக்கும்.

– ஆசிரியர்

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | Triplicane, Chennai-5 |
| Name | : | S. Sam Selva Raj |
| A/C No. | : | 1023 2934 679 |
| IFSC | : | SBIN 00 00 249 |
| SWIFT CODE | : | SBI NIN BB 455 |

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | Anna Salai, Chennai-6 |
| Name | : | Echo of His Call |
| A/C No. | : | 6038 0502 2319 |
| IFSC | : | ICIC 000 6038 |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | Triplicane, Chennai-5 |
| Name | : | Echo of His Call Educational Trust |
| A/C No. | : | 1023 2923 805 |
| IFSC | : | SBIN 00 00 249 |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**✻ வருட சந்தா ரூ. 100/– ✻ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.


## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**


**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**


**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th SEPTEMBER 2024**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**


***JESUS LOVES YOU!***

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers**, New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**